
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**819**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## வாக்குரிமைக்கு ஆபத்து!

வாக்காளர் அட்டையுடன் ஆதாரை இணைக்கும் முயற்சியை தேர்தல் ஆணையம் மீண்டும் தொடங்கியிருக்கிறது. இதுதொடர்பாக, மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியிருப்பதாவது: “போலி வாக்காளர்களைக் கண்டறிந்து, நீக்குவதற்கான முயற்சி இது என்கிறார்கள். இந்த இணைப்பு கட்டாயமில்லை, மக்கள் தாமாகவே முன்வந்து ஆதாரை இணைத்துக் கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறினாலும், இப்போதிருக்கும் படிவம் 6-B அதைக் கட்டாயமாக்குகிறது என ஆய்வாளர் ஜான் சிம்டே, ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் கூறியுள்ளார்.

குடிமக்கள் குறித்த தரவுகளை அரசையும் மக்களையும் தவிர, மூன்றாம் தரப்பு பயன்படுத்த முடியும் என்றும் அவர் எச்சரிக்கிறார். ஏற்கெனவே, 66 கோடிக்கும் மேலான ஆதார் அட்டைகள் வாக்காளர் அட்டைகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஆதார் இல்லாதவர்கள், இணைக்காதவர்கள், இணைக்க முடியாதவர்கள் தேர்தல் அலுவலர் முன் நேரடியாக ஆஜராகி, ஏன் இணைக்கவில்லை என்பதற்கான நியாயத்தைச் சொல்ல வேண்டும். வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், புலம்பெயர் தொழிலாளர்கள் போன்றோருக்கு இது பெரும் சுமையாகும்.

ஆதார் என்பது குடிமக்களை அடையாளப்படுத்தும் ஒன்றல்ல, அது இருப்பிடத்தை அடையாளப்படுத்துவது என்று சட்டமும், நீதிமன்றங்களும் ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டன. ஆதார் வைத்திருப்பவர் இந்திய குடிமகனாக இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. இது ஒரு கற்பனையான பிரச்சினையல்ல. 2015-இல் தேர்தல் ஆணையம் இந்த இணைப்பு முயற்சியைச் செய்தபோது தெலங்கானாவிலும், ஆந்திராவிலும் 55 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாக்காளர் பட்டியலைச் சரிசெயவதை விட, பாரம்பரிய முறையில் வீடு வீடாகச் சென்று உறுதி செய்வதே பிரச்சினைக்குத் தீர்வு என்கிறார் ஜான் சிம்டே” என கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





என்.சுரேந்திரன்

### ‘அறிவகம்’ அழைப்பிதழை வழங்கினேன்!

2017-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் உடல்நிலை குன்றி இருந்த நிலையிலும், என்னுடைய இல்லமான ‘அறிவகம்’ புதுமனை புகுவிழாவின் அழைப்பிதழை வழங்க வேண்டும் என்றதும் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அழைப்பிதழை அவரிடம் வழங்கி வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

– என்.சுரேந்திரன்,
மல்லூர் பேரூர் கழக முன்னாள் பொறுப்பாளர்,
பனமரத்துப்பட்டி, சேலம் கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாணவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம்!

1942-இல் திருவாரூரில் கலைஞரால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாணவர் மன்றமும், 1943-இல் கும்பகோணத்தில் தொடங்கப்பட்ட திராவிட மாணவர் கழகமும் இணைக்கப்பட்டு, திராவிட மாணவர் கழகமாக உருவானது. மாணவர்கள் ஆங்காங்கு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். விடுமுறை நாட்களை வீணடிக்காமல், பகுத்தறிவுப் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**7**

### பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# நங்கவரத்தில் நங்கூரமாய் கலைஞர்!

முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்தபோது, ‘கடற்கரைச் சாலையில் பல லட்சம் இளைஞர்கள் குவிந்தது திராவிட இயக்கத்தின் எதிர்கால இருப்பின் மீது படர்ந்த வசந்தம்’ என பத்திரிகைகள் எழுதின. ஆனால், குளித்தலை விவசாயிகள் சிந்திய கண்ணீர், கடந்த வரலாற்றில் செதுக்கப்பட்ட வைரம் என்பதை எழுதத் தவறிவிட்டன. குளித்தலைத் தொகுதியில் கலைஞர் முதன்முதலில் போட்டியிட்டு சட்டமன்றம் சென்றார் என்பதாலோ, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார் என்பதாலோ, விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்தார் என்பதாலோ சிந்தப்பட்ட கண்ணீர் அல்ல அது.

அந்தக் கண்ணீரின் முதல் துளி, கலைஞரின் சட்டமன்ற முதல் பேச்சில் விழுந்தது. தனது குளித்தலைத் தொகுதியில் விவசாயத் தொழிலாளர்கள் நிலச்சுவான்தாரர்களால் எதிர்கொண்டு வந்த, ஒடுக்குமுறைகள் குறித்துத்தான் கலைஞர் முதல் உரையை நிகழ்த்தினார். குறிப்பாக, அங்கிருந்த நங்கவரம் பண்ணையாளர்களாக ராமநாதய்யர், ரெங்கநாதய்யர் இருந்தனர். இவர்களிடத்தில் 33 ஆயிரத்து 412 ஏக்கர் நிலங்களை விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தனர்.

‘கையேர் வாரம், மாட்டேர் வாரம்’ என்ற இரு சாகுபடி முறைகள் அங்கு இருந்தன. இரண்டுமே விவசாயக் கூலிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் எதிராக இருந்தன. நியாய வாரமே அங்கு கிடையாது. பிரச்சினை கலைஞரின் கவனத்திற்குச் சென்றது.

04.05.1957 அன்று சட்டமன்றத்தில் நங்கவரம் பிரச்சினையை எடுத்துச்சொல்லி, நிலச்சீர்திருத்தம் செய்தே ஆக வேண்டுமென்று வலியுறுத்தினார். கலைஞர் பேசி அமர்ந்தவுடன், பேரவைத் தலைவராக அப்போதிருந்த யு.கிருஷ்ணாராவ், ஒரு துண்டுத் தாளில் ‘Very Good Speech’ என்று எழுதி செயலாளர் மூலமாக கலைஞரிடம் கொடுத்தார்.

இப்படி முதல் பேச்சிலேயே கவனம் ஈர்த்த கலைஞரை, கையோடு களத்திற்கு அனுப்பிவைத்தார் அண்ணா. பத்தாயிரம் விவசாயிகளுடன் சென்று ஏர் பூட்டி உழும் போராட்டத்தை முன்னெடுத்தார் கலைஞர். ‘உழுதவனுக்கே நிலம் சொந்தம்’, ‘பண்ணை ஆதிக்கம் ஒழியட்டும்’ முழக்கங்கள் விண்ணைப் பிளக்க, 23.08.1957 தொடங்கி, 09.09.1957 வரை போராட்டம் நீடித்தது. பண்ணையாளர்கள் பணிந்தனர். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிலம் பங்கிட்டுத் தரப்பட்டது. அந்த நிலத்தில், சுமார் 20,000 விவசாயிகள் இன்றும் உழுது கொண்டிருக்கிறார்கள்.



கலைஞரின் போராட்டத்திற்கு முன்பே, நான்கைந்து ஆண்டுகளாக குளித்தலையில் பண்ணை ஆதிக்கத்திற்கு எதிரான புகைச்சல் இருந்தது. அந்தப் புகைச்சலுக்கு காரணம், 1952-இல் உருவான திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம். திருச்சி முதல் நாகை வரை டெல்டா மாவட்டங்கள் முழுவதும் வேர்விட்டுப் படர்ந்த திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம், பண்ணையாளர்களுக்குப் புதிய நெருக்கடியை உருவாக்கியது. கூலி உயர்வு, வேலை உத்தரவாதத்திற்கு மாறாக, லாபத்தில் பங்கு, நிலத்தில் உரிமை என்ற முழக்கங்கள் முளைத்தன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சுயமரியாதை உணர்வை ஊட்டும் படையாகவும் இச்சங்கம் திகழ்ந்தது. அந்தப் பணியில் ரத்தம் சிந்தியோர், உயிரை இழந்தோர் ஏராளம். அப்படி, ரத்தமும் சதையுமாக வரலாற்றில் பதிந்துபோன திருச்சி மாவட்டம் லால்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குள் பயணம் தொடரும்..

...பயணிப்போம்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**59**

### ``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் கூட்டுச்சதியே நீட்!




**‘ஒன்றியத்தில் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி ஆட்சி நடந்தபோதுதான் நீட் தேர்வு வந்தது’ என்று உண்மைக்குப் புறம்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டுகிறாரே?**

தி.மு.க. பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது இந்திய மருத்துவ கவுன்சில் பரிந்துரைத்த நீட் தேர்வை எதிர்த்து, அப்போதைய முதல்வர் கலைஞர் ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதினார். மூத்த வழக்கறிஞர் வில்சன் மூலமாக, 6.1.2011 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது. நீட் தேர்வுக்கு உயர்நீதிமன்றம் கொடுத்த தடையை, 25-7-2011 அன்று உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது. பிரதமர் மன்மோகன்சிங் அரசும், இந்திய மருத்துவ கவுன்சிலின் நீட் தேர்வு பரிந்துரையை நிராகரித்து, அந்தந்த மாநிலங்களின் உரிமையாக விட்டுவிட்டது.

2013-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் அமர்வில் 2-1 என்ற பெரும்பான்மை தீர்ப்பின் மூலம், நீட் தேர்வு என்பது சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்தது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் ‘சங்கல்ப்’ நிறுவனம். அந்த வழக்கு 2014-இல் விசாரணைக்கு வந்தபோது பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிட்டது. முந்தைய வழக்கில் மூன்று நீதிபதிகளில் மாற்றுக் கருத்து (நீட் வேண்டும் என்று) தெரிவித்த நீதிபதி தலைமையிலான அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. பா.ஜ.க. அரசு நீட் தேர்வை நடத்தத் தயார் என்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டது. பா.ஜ.க. அரசு தயார் என்றதால்தான் உச்சநீதிமன்றம் அனுமதி அளித்தது. அதனால்தான், இந்தியா முழுவதும் நீட் திணிக்கப்பட்டது. அப்போது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தார். அவர் இதனை எதிர்த்தார். ஆனால், அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது, அ.தி.மு.க. அமைச்சராக இருந்த மாஃபா பாண்டியராஜன் நீட் தேர்வுக்கு ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்டார். அதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் நீட் தேர்வு நுழைந்தது. ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மற்றும் ஜெயலலிதாவுக்கும் துரோகம் செய்த இ.பி.எஸ். ஓ.பி.எஸ். தலைமையிலான அ.தி.மு.க. ஆகியவற்றின் கூட்டுச்சதிதான் நீட் தேர்வு.

> **அ.தி.மு.க. அமைச்சராக இருந்த மாஃபா பாண்டியராஜன் நீட் தேர்வுக்கு ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்டார். அதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் நீட் தேர்வு நுழைந்தது.**

2017-ஆம் ஆண்டில் நீட் விலக்கு கேட்டு சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு , 2019-ஆம் ஆண்டில் மோடியைச் சந்தித்து ஒப்புதல் அளிக்க வேண்டும் என கேட்டதாக நாடகமாடினார் பழனிசாமி. ஆனால், 2017-ஆம் ஆண்டிலேயே நீட் விலக்கு மசோதா குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட விவரத்தை, மக்களிடமிருந்து மறைத்தார் பழனிசாமி. அதற்காக உயர்நீதிமன்றம் அப்போதைய எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தமிழ்நாடு அரசைக் கண்டித்தது.

2011-ஆம் ஆண்டு தேர்தல் சமயத்தில் அரியலூர் தங்கை அனிதாவின் குரலை, நீட்டுக்கு ஆதரவாக பேசுவதுபோல ‘டப்’ செய்து ஓட்டுக்கேட்ட இந்த ‘நாடக மன்னன்’ இன்று வடிக்கும் நீலிக்கண்ணீர் மக்கள் மன்றத்தில் நிற்காது.

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131